# தேவனை அறிவது மெய்யாகவே சிறந்தது




## 1.5 ஒரே இரட்சகர்

**வேத வசனம்:** **அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.**
*அப்போஸ்தலர் 4:12*



**அறிக்கை:** **இயேசுவை அல்லாமல் இரட்சிப்பு இல்லை**

**சத்தியம்:** பாவத்தின் விளைவாக வேறு வழியின்றி மனிதன் தேவனைவிட்டுப் பிரிக்கப்பட்டான். ஆனால் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து இயேசு தமது இரத்தத்தின் மூலமாக மனிதனை மீட்டு அவர்கள் அனைவரையும் தேவனுடன் ஒப்புரவாகும்படி அழைத்தார்.

## வேத பகுதி: ஆதியாகமம் 3

### பாடம்

**1. ஆதியில் மனிதன் தூய்மையாகவும் ஒழுங்காகவும் இருந்தான்:** ஆதியில் தேவன் மனிதனை தன்னுடைய சொந்த சாயலில் உருவாக்கினார். அவன் குறைகள் அற்றவனாகவும், பரிசுத்தமுள்ளவனாகவும், முழுவதும் வெளிச்சமானவனாகவும் இருந்தான். ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோர் முதன் முதலாக தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். (ஆதி. 1, 2)

**2. ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தார்கள்:** பின்னர் ஆதாமும் ஏவாளும் பாவபிசாசின் (பழைய சர்ப்பம்) குரலைக் கேட்டார்கள். அவர்கள் இச்சைக்குட்பட்டு தேவன் தடைசெய்தவைகளைச் செய்தார்கள். பாவப்பிசாசு என்பவன் ஒருதள்ளப்பட்ட தூதன். இப்படியாக எல்லா மனிதரும் நம்முடைய முதற்பெற்றோரான ஆதாம் ஏவாளைப்போல பாவிகளாகி தேவனுடைய மகிமையை இழந்தோம். ஒரு சிறு குழந்தை கூட தவறான சிந்தைக் கொள்ளவும் ஒருவரும் கற்பிக்காமலேயே பொய் சொல்லவும் செய்கிறது. (ஆதி. 3, ஏசாயா 14:12-15)

**3. பாவம் மனிதனை தேவனைவிட்டுப் பிரித்தது:** பாவத்தின் விளைவாக மனிதன் தேவனை விட்டு பிரிக்கப்பட்டான். தேவனைத்தவிர அனைத்துமே இருள் என்று வேதம் சொல்லுகிறது. எனவே தேவனைவிட்டு மனிதன் பிரிந்துசெல்லும்போது மெய்யான அர்த்தமுள்ள வாழ்வை இழப்பதுடன், இருண்ட வாழ்வையும், காணாமல் போகும் நிலையையும் அனுபவிக்கிறான். ஒளியற்ற ஒரு மெழுகுவர்த்தியைப்போல அவனுடைய இருதயம் காணாமல் போகும் உணர்வையும், வெறுமை எண்ணத்தையும் அனுபவிக்கிறது.

**4. மனிதர் சுய முயற்சியால் இரட்சிப்பை சம்பாதிக்க இயலாது:** மனிதன் தன்னைத்தான் விடுவித்துக்கொள்ள இயலாது. தன்னை மீட்ப்பதற்காக அவன் எடுக்கும் முயற்சிகளான நற்செயல்கள் செய்தல், மத கடமைகள் செய்தல், சிறந்த தத்துவங்களைப் பின்பற்றுதல் போன்ற அனைத்தும் வீணானவைகளே. (ரோமர் 7:18)

**5. உலகின் ஒரே இரட்சகர்:** கர்த்தராகிய இயேசு மட்டுமே பாவம் செய்யாதவர். ஆனால் அனைவரது பாவங்களையும் தன்மீது ஏற்றுக்கொண்டு சிலுவையில் மரித்து பாவத்திற்கு பரிகாரம் செய்தவர். அவர் தேவனுடைய பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு மீட்பை அனுபவிக்கும்படியாக அனைவரையும் அழைக்கிறார். (யோவான் 1:29, எபிரெயர் 9:22)

**முடிவுரை:** தேவனாகிய கர்த்தர் எல்லா மனிதரையும் நேசிப்பதால், தம்முடைய ஒரே குமாரனை மீட்பராக உலகத்திற்கு அனுப்பினார். இயேசுகிறிஸ்துவை தவிர இரட்சிப்பை வேறெங்கும் பெற்றுக்கொள்ள இயலாது. எல்லா மக்கள் கூட்டத்தாரிலும், எல்லா இடத்திலும் எல்லா தேசத்திலும் இயேசுவை விசுவாசிப்பவர்கள் இலவசமாக இரட்சிப்பை பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.